# ஜனவிநோதினி.

இல. 12.] டிசெம்பர்மீ 1875. [புஸ்த. VI.

## ஜிப்ரால்டர்.

ஜிப்ரால்டர் என்பது ஸ்பானியாதேசத்துத் தென்பாகத்தில் ஜந்துக்கள்நாவைப்போல் ஒடுங்கி நீண்டிருக்கிற ஒரு விசேஷித்த பரியாயத்தீவுக்குப்பேர். அதை இயல்பான ஒரு மலையரண் என்று சொல்லுவதைவிட அரண்செய்யப்பட்ட ஒரு மலையென்னலாம். அந்த மலையின் உச்சிகளில் ஒன்றின்மேல் சிறிய பட்டணம் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. அந்தப் பரியாயத்தீவின் நீளம் தென்வடக்கில் மூன்றுமைலுக்கு உட்பட்டது; அகலம் எந்த இடத்திலும் முக்கால்மைலுக்கு அதிகமில்லை. ஜிப்ரால்டர் மலையின் வடபுறமுகப்பானது சமபூமியிலிருந்து செங்குத்தாயெழுந்து கடலின் இருபுறமும் பார்த்திருக்கிறது; ஆனால் மேலண்டைப்பக்கத்தில்மாத்திரம் நீண்ட பள்ளம் ஒன்றுண்டு.

அம்மலையானது கிழண்டையாய் முனைவரைக்கும் இடைவெளியின்றித் தொடர்ச்சியாயிருக்கிறது. மத்திய கடற்கரை ஓரமாய் அதன் பக்கங்கள் சில இடங்களில் சமுத்திரமட்டத்துக்குமேல் 1400-அடி உயரம்வரைக்கும் எழுந்து இயற்கையாய் செங்குத்தும் ஏறக்கூடாதவையுமாயிருக்கின்றன. அந்த மலை மேல்பக்கத்தில் ஜிப்ரால்டர் கடல்வரைக்கும் படிப்படியாய்ச் சரிந்திருக்கின்றது. ஜிப்ரால்டர் பட்டணம் பரியாயத்தீவின் வடமேற்குமூலையில் சமுத்திரக்கரை முதற்கொண்டு மலைச்சிகரமட்டும் பரப்புற்றதாய்க் கட்டப்பட்டு அரண்களுக்கெல்லாம் மூலாதாரமாயிருக்கின்றது.

ஜிப்ரால்டர் கடலின் வடகரையில் நின்றுக்கொண்டு ஒருவன் தென்கிழக்காய்ப் பார்த்தால் அவன் கண்ணுக்கு எப்படித் தெரியு

மோ அப்படியே அடுத்தபடம் எழுதப்பட்டிருக்கிறது. அவனுக்கு இடதுபக்கத்தில் காணப்படுகிற செங்குத்தான சிகரம் மலையின் வடபாகத்திலுள்ளது; அதன் உயரம் 1350–அடி. இதைத் தவிர இன்னும் இரண்டுமூன்று பிரதான சிகரங்களுமுண்டு. பட்டணத்துக்கு நடுவில் உள்ள ஒரு சிகரம் படத்தின் வலதுபக்கத்துக் கோடியில் காணப்படும்.

இங்கிலீஷ் துரைத்தனத்தார் இஸ்பாணியரோடு சிலவருஷகாலம் சண்டைசெய்து அநேக வெற்றிகள்பெற்று, கடைசியாய் 1704-ம் வருஷத்தில் ஜிப்ரால்டரை கைவசப்படுத்திக்கொண்டார்கள்.

## கூட்டுத்தொழிலும் தொழிற்பிரிவினையும்.

உலகத்தில் சகலவித தொழில்களும் மேன்மேலும் விருத்தியாகி நல்வாழ்க்கைக்கு அடுத்த சவுக்கியங்கள் எல்லோருக்கும் உண்டாவதற்குக் கூட்டுவேலை இன்றியமையாத கருவியாயிருக்கின்றது. கூட்டுவேலையாவது பலர்கூடி வேலைசெய்வது; அது இருவகைப்படும். ஒரே வேலையை அநேகம்பேர் கூடிச்செய்து முடிப்பது ஒன்று; பல வேலைகளைச் செய்வதில் ஜனங்கள் ஒருவர்க்கொருவர் ஒத்தாசையாயிருப்பது மற்றொன்று. இவ்விரண்டையும் உதாரணங்களினால் விரித்துரைப்போம்.

நாலு வேட்டைநாய்கள் தனித்தனியாய் ஓடி எத்தனை முயல்களைக் கொல்லுமோ அதைவிட அதிகமாய்க் கொல்லும் இரண்டுநாய்கள் ஒன்றாய் ஓடினால். அப்படியே மனிதன் பிரயாசப்பட்டுச்செய்கிற அநேக காரியங்களை இருவர்கூடிச்செய்தால் நான்குபேர் பிரத்தியேகம் பிரத்தியேகமாய் எவ்வளவு செய்யக்கூடுமோ அதைவிட அதிகமாய்ச் செய்வார்கள். எப்படியெனில் பளுவான சுமைகளைத் தூக்குவது, மரம்வெட்டுவது, தண்ணீர் இறைக்கிறது, படகு ஓட்டுவது, சுரங்கம் வெட்டியெடுப்பது முதலான எண்ணிறந்தகாரியங்களில் அநேகம்பேர் ஒன்றாய்க்கூடி ஒரேகாலத்தில் ஒரே இடத்தில் ஒரேவிதமாய் வேலையை நடத்தவேண்டும். சீர்திருத்தமில்லாத ஜனங்கள் இப்படியெல்லாம் ஒருவர்க்கொருவர் ஒத்தாசை பண்ணுகிறதில்லை; ஆகையால் அவர்களுடைய நிலைமை மிகவும் பரிதாபமாயிருக்கிறது. நாகரீகதேசங்களில் வேலைக்காரர் ஒருவர்க்கொருவர் செய்துவரும் உதவியை சட்டென்று நிறுத்திப்போட்டு அவரவர் தத்தம் பாட்டைப் பார்த்துக்கொள்ளுகிறதாயின் எவ்வளவு கெடுதி உண்டாகுமென்று ஒருக்ஷணகாலம் மனதினால் நினைத்துப்பார்ப்போமானால், கூட்டுவேலையினால் எவ்வளவு திரளான நன்மைகள் உண்டாகின்றனவென்று நமக்குத் தெரியும்; இதுதான் பலர் ஒன்றாகச்சேர்ந்து ஒரேமாதிரியான காரியங்களை முற்றுப்பெறச்செய்வது. மற்றொன்று வெவ்வேறு வேலைக்காரர்கள் வெவ்வேறு வேலைகளைச்செய்வது; அதெப்படியெனில் ஒருவகுப்பு வேலைக்காரர் சாகுபடிசெய்து தங்களுக்குவேண்டிய அளவுமட்டுமல்லா

மல் மற்றப்பேருக்குக் காணும்படியாயும் ஆகாரத்துக்குவேண்டிய தானியத்தை விளைவிப்பதும், இன்னொருவகுப்பார் தங்களுக்குவேண்டியதைப் பார்க்கிலும் அதிகமாய் துணிநெய்வதும், இப்படியே ஒவ்வொரு வகுப்பாரும் ஒவ்வொரு வேலையில் பிரவேசிப்பது. இப்படிச் செய்தால் அவரவர் தத்தமக்குள்ள மிகுதியான பொருளைக்கொண்டு தத்தமக்குவேண்டிய மற்ற சாமான்களை வாங்கிக்கொள்ளலாம்; இப்படியில்லாமல் ஒவ்வொருவனும் தனக்கு வேண்டியபொருள்கள் யாவற்றையும் தானே செய்துகொள்ளுகிறதென்றால் முடியாதகாரியம்.

மேற்கூறிய இருவகைக் கூட்டுவேலைக்கும் உள்ளபேதம் என்னவெனின், ஒன்று கூட்டுவேலைதானென்பது எப்படிப்பட்ட மூடனுக்கும் நன்றாய்த்தெரியும்; மற்றொன்று அப்படி எல்லாருக்கும் தெளிவாய்த்தெரியாது. அநேகம்பேர் சேர்ந்து ஒரு பாறையைத் தூக்கினால் அவர்களில் ஒவ்வொருவனும் அதைத் தூக்குகிறானென்பது கண்கண்ட காட்சியாயிருக்கிறது; பற்பலவித வேலைக்காரர்கள் அநேகவிடங்களில் ஒருவர்க்கொருவர் தெரியாமல் வெவ்வேறு வேலைகளைச்செய்வது கூட்டுவேலையென்பதற்குச் சந்தேகமில்லையாயினும், அது அப்படிப்பட்டதென்று பரிஷ்காரமாய் கண்ணுக்குத் தெரிகிறதில்லை.

இப்போது நாகரீகம் அடைந்திருக்கிற அளவுக்கு பருத்திச்செடிவைத்து வளர்த்துப் பஞ்சு உண்டாக்குவதும், பஞ்சை நூலாகநூற்பதும், நூலைத் துணியாகநெய்வதும், நெய்ததுணிக்குச் சாயம்போடுவதும், தனித்தனி வெவ்வேறு கூட்டத்தாருடைய தொழிலாக இருக்கின்றன. இத்தனை பேர்தவிர, எத்தனையோ பாரிவர்த்தகர்களும் சில்லறை வியாபாரிகளும் கூலிவேலைக்காரரும் ஆடைசெய்வதாகிய ஒரேகாரியத்தில் சேர்ந்திருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் இந்த வேலைகளைச்செய்வது மூன்சங்கேதத்தினாலல்ல; ஒருவர்செய்வது ஒருவருக்குத் தெரியக்கூட தெரியாது. பிறர் தங்களுக்கு மற்ற சாமான்களைச் செய்துகொடுப்பார்களென்ற நம்பிக்கையில்லாமற்போனால் இவர்கள் இந்த ஒரெவேலையைச் செய்துகொண்டிருப்பார்களா? இப்படித்தான் ஒவ்வொரு வேலைக்காரரும் மற்ற வேலைக்காரர்களிடத்தினின்று உதவிபெறுகிறார்கள்.

ஒவ்வொருவகுப்பு வேலைக்காரரும் ஒவ்வொரு சாமானை எல்லாருக்கும் செய்துகொடுக்கிறதும், மற்ற சாமான்களைத் தாங்கள் மற்ற வகுப்பாரிடத்திலிருந்து வாங்கிக்கொள்ளுகிறதுமாய் ஒவ்வொரு வகுப்பாருக்கும் ஒவ்வொருவேலையென்று மொத்தமாய் பொதுவான ஒரு தொழிற்பிரிவு ஏற்பட்டபிறகு, ஒரு தொழிலே பல உட்டொழில்களாகப் பிரிவுபடக்கூடுமாவென்றுபார்த்து அந்த வழியிலும் தொழிற்பிரிவை விசேஷமாய்க் கொண்டுபோகவேண்டியது அவசியம்; ஏனெனில் ஒவ்வொரு வேலைக்காரரும் எவ்வளவு அற்பமான வேலைசெய்கிறார்களோ அவ்வளவிற்கு அவ்வளவு நன்மை உண்டாகும். இது அடியில்வரும் உதாரணங்களினால் செம்மையாய் விளங்கும். ஒருவன் கம்பி இழுப்பது, ஒருவன் அதை நீட்டுவது, ஒருவன் அதைத் துண்டுதுண்டாகத் தறிப்பது, ஒருவன் கூர்படுத்துவது இதுமுதலாகப் பதினெட்டு பிரத்தியேகமான செய்கைகளாக மிகவும் அற்பமான குண்டூசிவேலையைப் பிரிக்கலாம். இந்த வேலையை இப்படிப் பிரித்துச்செய்தால், பதினெட்டுப்பேரும் சேர்ந்து

ஒருநாளைக்கு இருபதுராத்தல் ஊசிசெய்யக்கூடும்; ஒரு ராத்தலுக்கு நாலாயிரம் ஊசிவிழுக்காடு எண்ணாயிரம் ஊசி ஆயிற்று; ஆகையால் ஒவ்வொருவனும் ஒருநாளைக்கு நானூறு நானூற்றைம்பது ஊசி செய்ததாக வைத்துக்கொள்ளலாம். ஒருவனே இந்தவேலைகள் எல்லாவற்றையும் செய்துகொண்டு குண்டூசிபண்ண ஆரம்பித்தால் ஒருநாளைக்கு பத்து பதினைந்துசெய்து முடிப்பது அரிது. இதேமாதிரியாய் காலப்போக்காக ஆடும் கடிதாசி சீட்டு பண்ணும்வேலையை எழுபதுபங்காகப் பிரிக்கலாம். எழுபது வேலைக்காரர் இல்லாதபட்சத்தில் ஒருவனே இரண்டுமூன்று காரியங்களைச் செய்யும்படியாக நேரும். முப்பதுபேருள்ள ஒரு சீட்டுசெய்யும் சாலையில் நாள் ஒன்றுக்கு 15000 சீட்டு தேறும்; இந்தக் கணக்குப்படிக்கு ஒருவனுக்கு தினம் ஒன்றுக்கு 500 சீட்டு ஆயிற்று. எல்லா வேலைகளையும் ஒருவனே செய்வானானால், ஒருநாளைக்கு இரண்டுசீட்டுகூட முடியாது. செடியாரம் செய்யும் தொழிலுக்கு நூற்றிரண்டு வேலைக்காரர் வேண்டுமாம். இப்படியே அந்தந்தத் தொழிலுக்குத்தக்கபடியிருக்கும்.

தொழிற்பிரிவினையால் அதிக வேலை கூடிவருகிறதே அது என்னத்தினாலேயென்றால், ஒருவன் ஒரு வேலையையே செய்துகொண்டிருந்தால் அவனுக்கு அதிக சாமர்த்தியம் வரவர மிகும். அன்றியும் ஒருவிதமான வேலையைச்செய்துபோட்டு மற்றொருவேலைக்குப்போய் ஆரம்பிக்கிறதற்கு கொஞ்சகாலம்செல்லும்; ஒரேவேலையாயிருக்கிற பட்சத்தில் இந்தக் கால தாமசம் உண்டாவதற்கிடமில்லை. இவ்விரண்டுலாபந்தவிர, இன்னொரு லாபமுமுண்டு. ஒரு தொழிலின் பாகங்கள் அனைவற்றிற்கும் புத்தி சக்தி சாமர்த்தியம் சமமாகவேண்டியிராது. ஒன்றுக்கு அதிக சாமர்த்தியம்வேண்டியிருக்கும்; ஒன்றுக்கு அதிக பலம்வேண்டியிருக்கும்; மற்றொன்று சாமான்னியமாய் எல்லாரும் செய்யும்படியிருக்கும். ஆகையால் ஒரு தொழில் பல பாகங்களாகப் பிரிக்கப்பட்டால் எதெதற்கு கெட்டிக்காரர்வேண்டுமோ எதெதை எல்லாருஞ்செய்யலாமோவென்று பார்த்து தகுந்தபடி வேலைக்காரர்களை அமர்த்திக்கொள்ளலாம். ஒருகாரியத்திற்கு எவ்வளவு திறமைவேண்டியதோ, அவ்வளவு திறமைதான் அதற்கு உரியது; ஏற்றமும் கூடாது, குறைச்சலுங்கூடாது. குண்டூசி செய்யும் தொழிலில் ஒருவகைவேலைக்கு மூன்றுஅணா கூலி, மற்றொருவகையான வேலைக்கு மூன்றுரூபாய்கூலி. மூன்றுரூபாய் சம்பாதிக்கக்கூடிய மனிதன் மூன்றுஅணா கூலிவரும் வேலையைச் செய்தால் அது அவனுக்கு நஷ்டமன்றோ? இன்னும் அநேகந் தொழில்களில் இதைவிட அதிகமான தாரதம்மியங்களும் காணப்படும்.

# வாயுமண்டலம்.

நாம் வாசமாயிருக்கிற பூமியைச்சுற்றி நாற்புறமும் சமுத்திரம் சூழ்ந்துகொண்டிருப்பதுபோல் வாயுமண்டலமும் இப்பூமியெங்கும் வியாபித்திருக்கின்றது. இப்பூமியில் பள்ளத்தாக்குகளிலொழிய மற்ற கண்டங்கள் தீவுகள் மலைமேடுமுதலிய விடங்களில் கடல் பரவியிருக்கவில்லை. வாயுமண்டலமோ அப்படிப்பட்டதன்று; அது பரவாதவிடமே இவ்வுலகில்லை. அது இப்பூமியெங்கும் வியாபித்த ஒரு அகண்ட வஸ்துவாயிருப்பினும், அது நம்முடைய பார்வையைத் தடுக்கமாட்டாது. நாம் பார்க்கவேண்டிய பொருள் எவ்வளவு தூரத்திலிருந்தாலும் நமது பார்வை வாயுமண்டலத்தை யூடுருவிச்செல்லும். இப்படிப் பரமாணுமுதல் பரமமஹத்துவளாயில் உள்ளும் புறமும் இடைவிடாது நிறைந்திருக்கும் ஆகாயத்தையும் ஒரு பெருங்கடலென்னலாம். கடலில் மீன் முதலைமுதலிய பல நீர்வாழ்ஜந்துக்கள் நீந்துவதுபோல், ஆகாசமஹாசமுத்திரத்திலும் பற்பலவிதமான பறவைகள் நீந்துகின்றன. பலவித நண்டுகளும் சிப்பிப்பூச்சிகளும் கடலின் அடிப்புறத்திலேயே ஊர்வனபோல மனிதர் மாடு மிருகம் முதலியவர்கள் வாயுமண்டலத்தின் அடிப்புறத்திலேயே சஞ்சரிக்கிறார்கள்.

பூமியெங்கும் சூழ்ந்துகொண்டு அதற்கு உணவையுண்டாக்கிப் போஷிக்கின்ற ஆகாசமானது ஜலாசயத்தைவிட வெகு லேசாயும் கம்பீரமாயுமிருக்கின்றது. ஆகாயமும் கடல்போல் ஒருகால் உல்லோலகல்லோலமாயும் ஒருகால் அமைதியாயுமிருக்கும்; ஒருகால் பொங்கும், ஒருகால் வடியும்; ஒருகால் ஒளிவீசிக்கொண்டிருக்கும், ஒருகால் இருண்டிருக்கும். வாயுமண்டலமென்பது வெகு விநோதமான வஸ்து. அது சிருஷ்டியினியற்கைக்கு ஒரு பிரதானமான திருஷ்டாந்தம். அது ஒன்று இல்லாமற்போனால் ஒரு ஜந்துவும் பிழைத்திராது, ஒரு செடியும் முளையாது, நெருப்பு ஒருபோதும் எரியாது, ஒளி எங்கும் பரவாது; சப்தமுண்டாவதற்கு ஆகாயமே முதற்காரணம். ஆகாயமிராதபக்ஷத்தில் மலைகளெல்லாம் ஓசையின்றி இடிந்துவிழவேண்டும்; ஒருவர்க்கொருவர் பேசும் பேச்சுக்கும் இடிமுழக்கத்திற்கும் யாதொரு வேறுபாடுமிராது. செவிப்புலனே அழிந்துபோம்படி வரும்.

பூமியிலிருந்து நாற்பதுமைல் உயரத்திற்குமேல் ஐம்பதுமைல் தூரம்வரையில் வாயுவின் தன்மை இப்படிப்பட்டதென்று எவராலும் கண்டறியக்கூடாததாயிருக்கிறது. அது எப்புறத்தும் நம்மைச் சூழ்ந்துகொண்டிருந்தும் நமது கண்ணுக்குப் புலப்படாததாயிருக்கின்றது. ஆகாயமானது

நமது தேஹத்தில் ஒரு சதுர அங்குலம் அளவுள்ளவிடத்தில் ஐந்துவீசை சுமைசுமத்துகின்றது; நமது தேஹம் முழுதும் 400 பாரம் சுமைசுமத்தும். ஆயினும் அது எப்புறத்தும் சமமாய்த் தாக்குவதனால் அது நமக்குச் சுமையாய்த் தோன்றுகிறதில்லை. ஆகாயம் அவ்வளவு பெரியபதார்த்தமாயிருந்தாலும் அதிமெதுவான இறகைப்பார்க்க மெதுவானது. கையினால் தொட்டறியத் தகுந்தவஸ்துவன்று; அதிநுட்பமான சிலந்தைக்கூடுகளையும் சலிப்பிக்கிறதில்லை, மெல்லியமலர்களையும் அசக்குகிறதில்லை. அவைகளுக்கு அனுகூலமான பனிமுதலியவைகளையுண்டாக்கி அவைகளைப் போஷிக்கின்றன; ஆனால் அது வல்லமையிற் குறைந்ததோ? அன்று. உலகத்திற்கு உயிர்த்துணையான தன் கைகளால் கடலில் கப்பல்களைக் கொண்டுபோகவும், மலைமுதலியவைகளை மண்ணாக்கவும் வல்லது.

காற்றானது முனைந்துவீச ஆரம்பித்தால் அதன் வலிமைக்கு உட்படாத மலைகளும், காடுகளும், வீடுகளும் உலகினிலுண்டோ? வாயுவுக்கு வெறிவந்தால் பூமியெங்கும் ஒரே ஸமமாய்விடும். கடலில் அலைகள் மலைபோல எழும்பிவரும். கப்பல்களெல்லாம் துண்டுதுணுக்கையாய்ப் போம். பூமியெங்கும் பகற்காலத்தில் சூடுகொண்டு இராக்காலத்தில் குளிர்ந்துபோவதும் காற்றின் குணத்தினாலேதான். பூமியினின்றும் கடலினின்றும் ஆவிகளையுண்டாக்கி அவைகளை மேகங்களாக மாற்றி மறுபடி அவைகளினின்றும் மழையுண்டாக்குவதும் வாயுவே. காலைமாலைவேளைகளில் சூரியன் மறைந்திருக்கும் காலத்திலும், நேராய்ப்போகிற சூரியகிரணங்களைச் சாய்வாய்ப் பூமிமேல் பரவச்செய்து சந்திவெளிச்சம் உண்டாக்குவதும் வாயுவே.

வாயுமண்டலம் ஒன்று இராவிட்டால் திடீரென்று பகற்பதினைந்துநாழிகை அர்த்தராத்திரியாகவும், அர்த்தராத்திரி நடுப்பகலாகவும்வேண்டும்; நமது காட்சிகளைச் செழிப்பித்து அழகுசெய்கின்ற காலைமாலை ஒளி ஒருபோதும் உண்டாகக்கூடாது. நெற்றி சுருங்கிப்போம்படி அருக்கன் அதியுக்கிரமாய் ஒளிவீசும்போது மெதுவாய் முகத்தைமறைக்க மேகமே இல்லாமற்போகவேண்டும். சூரியகிரணங்கள் அவன் அருகில் எவ்வளவு கொடுமையாய்க் காய்கின்றதோ அப்படியே பூமியில் வந்து விழவேண்டும். ஜீவவர்க்கங்களுக்கு உயிர்ப்புக்கு ஆதாரமான பிராணன், அபானன்முதலிய காற்றுகளாய், பிராணிகளின் சரீரத்திற் சூடு உண்டாக்கி அவைகளைப் போஷிப்பதும் வாயுமண்டலமே; ஜீவதேஹத்தில் உபயோகப்பட்டு விஷமாய்ப்போகிற கெட்டகாற்றுகளை மறுபடி தானேவாங்கிக்கொண்டு அதை நல்லகாற்றாக மாற்றுவதும் வாயுமண்டலமே. வெளித்தீகளை ஜ்வலிக்கச் செய்வதுபோலவே பிராணாதாரமான ஜாடராக்கினியையும் வாயுதான் ஜ்வலிப்பிக்கின்றது.

கங்களாயும், பக்ஷிகளாயும், மச்சங்களாயும் மனிதர்களுக்கு உணவுகள் நிறைந்திருக்கின்றன.

இப்படி இவ்வுலகக்காட்சியை வெகு விநோதமாய் அலங்கரிக்கின்ற பலவித ருதுக்களேயும் அந்தந்த ருதுக்களிலுண்டாகின்ற நாஞ ...மான இலைகளையும் காய்களையும் கனிகளையும் இவ்வுலகத்திலுள்ள உயிர்கள் சுகமாய் ஜீவிப்பதற்காகவே ஜகதீசன் உண்டுபண்ணியிருக்கிறுன்.

ஆடுமாடுகளுக்குப் புல்லையளித்திருப்பதுபோலவும், பூச்சிபுழுக்களுக்கு இலைகளையளித்திருப்பதுபோலவும், நமக்கும் ஒரு வருத்தமுமில்லாமல் அடையத்தக்கதாய் ஆகாரத்தைக் கடவுள் அளித்திருந்தால் மிக்க நலமென்று சிலர் நினைப்பார்கள். மற்ற ஜந்துக்களைப்போலவே நாமும் அதேமாதிரியாய்ப் புசிப்பதும் தூங்குவதும் இறப்பதுமாயிருந்தால் அப்படியே இருந்திருக்கும். மன்னுயிர்வாழ்வோ அத்தன்மையதன்று. சகலமான விஷயங்களையும் செம்மையாய் ஆராய்ந்து அறியவும், நன்றாயுழைத்து வேலைசெய்யவும் நமக்குக் கடவுள் புத்திவலிமையும் தேகவலிமையும் கொடுத்திருக்கிறூர். அது மற்ற ஜந்துக்களுக்குக் கிடையாது. நம்முடைய மனதும் தேகமும் எவ்வளவு சுகமாயிருக்கின்றதோ அவ்வளவு சீராய் அந்த வலிமையை நாம் உபயோகிக்கலாம்.

இந்த விஷயத்தில் பசி ஒரு உபாத்தியாயர்போல மிக்க உபயோகமாயிருக்கின்றது. பசியானது எக்காலத்திலும் எந்த மனிதனையும் உழைக்கச்செய்கின்றது. மற்றொன்றும் அப்படிச் செய்யமாட்டாது. நாம் செய்யும்வேலை, பசியெடுத்தபோது அதற்கு ஆகாரத்தைச் சித்தமாய் வைத்துக்கொண்டு காத்திருக்கவேண்டுமென்பதல்ல. எக்காலத்திலும் அதற்கு யாதொரு குறையுமில்லாமல் வேண்டுமளவு திருப்திசெய்யக்கூடிய வழிகளைச் சித்தமாய்த் தேடிவைத்துக்கொண்டிருக்கவேண்டும். பற்பல காட்டுமிருகங்களையும், மீன்முதலிய அநேக ஜலஜந்துக்களையும் பிடிக்கும் விதங்களும், பூமிகளைப் பண்படுத்தி விதைவிதைத்து அறுவடையாக்குகிற வழிகளும், தங்களுக்கு வேண்டிய வேலைகளை எளிதில் முடிக்கும்படி ஆயுதங்களையும் யந்திரங்களையும் உபயோகிக்கத்தக்க மார்க்கங்களும், பூமி அதிகமாய் விளையும்படி அதைச் சீர்ப்படுத்தத்தக்க மார்க்கங்களும், தங்களுக்கு உதவியான ஜந்துக்களை வளர்க்கும் விதங்களும் மனிதர்களுக்கு நன்றாய்த் தெரியும். சுபாவத்தில் புசிக்கக்கூடாமல் கடினமாயிருக்கிற பதார்த்தங்களை நெருப்பில் பாகம் பண்ணிப் புசிக்கப் பக்குவப்படுத்திக்கொள்வார்கள். தங்கள் தேசத்தில் உணவு பூர்த்தியாய்க் கிடைக்காவிட்டால் தேசாந்தரத்தினின்றும் அழைப்பித்துக்கொள்வார்கள். இப்படி மனிதர்கள் தங்கள்

சரீரத்தைப் போஷிப்பதற்காகப் படுகிற பிரயாசமெல்லாம் அவர்கள் மனதிற்கு மிகவும் உற்சாகமுண்டாக்கி, அவர்களை அதிக யுக்தியும் யோசனையும் உடையவர்களாக்கி வேறுகாரியங்களில் சுலபமாய்ப் பிரவேசிக்க வழியுண்டாக்கிக் கொடுக்கிறது.

தாம் கொடுத்திருக்கிற வல்லமையையும், யுக்தியையும் செம்மையாய் உபயோகிக்கச்செய்து அவரவர்கள் படுகிற பரிசிரமத்துக்குத்தக்கபடி பூமியைப் பயன்கொடுக்கச் செய்வதுதவிர இன்னும் செம்மையாய்ச் சர்வவல்லவர் தாம் சிருட்டித்த மன்னுயிர்களைக் கற்பித்திருக்கக்கூடுமோ?

---

## தசகுமாரசரிதம்.

இரண்டாவது:

அபஹாரவர்மாவின் கதை.

தசகுமாரர்களிலொருவனான அபஹாரவர்மாவென்பவன், ராஜகுமாரனைத் தேடிக்கொண்டுபோகையில் சம்பாநகரம்போய்ச் சேர்ந்து அங்கே தனக்குத் துணைசெய்த ஒருவனைத் தோழனாக்கிக்கொண்டு அவனால் அந்நகரத்து நடவடிக்கைகளை நுட்பமாய் அறிந்து அப்பட்டணத்தில் உலோபிகளே வெகுவாய்க் குடியேறியிருக்கின்றனரென்று அறிந்துகொண்டேனென முன்லஞ்சிகையில் சொல்லிமுடித்து இன்னும் சொல்லுகிறான்.

அப்படியிருக்கையில் ஒருநாள் ஒருவர்முகம் ஒருவர்க்குத் தெரியாத நிசிவேளையில் அரைக்கச்சும் கரித்துணியும் உடுத்திக் கத்திகேடயமுதலிய ஆயுதங்களும் இன்னும் வேண்டிய பல உபகரணங்களும் எடுத்துக்கொண்டு லோபியான ஒரு தனிகன்வீட்டிற்புகுந்து தடையில்லாமல் மட்குடமுதற்கொண்டு அபகரித்து வீதிவழியாய் வருகையில், நீர்கொண்டமேகத்தில் மின்னல்மின்னுவதுபோல அவ்விருளில் ஒருபெண் போவதுகண்டு நான், நீயார், எங்கே போகிறாயென்று கேட்டதற்கு, அவள், ஐயனே! இந்நகரில் குபேரவல்லவர் என்று ஒருவரிருக்கிறார். அடியாள் அவர்மகள். நான் பிறந்தபோதே என்தகப்பனார் என்னைத் தனமித்திரனென்கிற ஒரு செல்வப்பிள்ளைக்குக் கன்னிகாதானஞ்செய்துகொடுப்பதாய்த் தீர்மானித்தார். அந்த தனமித்திரர் உதாரகுணமுள்ளவர்களிற் சிறந்தவராதலால் தகப்பன்காலத்திற்குப்பிறகு தன்பொருளனைத்தையும் யாசகர்களுக்குத் தானங்கொடுத்து மிக்கவறுமையடைந்தார். அதன்பிறகு அவர்க்கு உதாரகர் (பெருங்கொடையான்) என்றே பேர்பிரசித்தமாயிற்று. அதுதெரிந்து என்பிதா வறிய

றென்று அவளைவிட்டு அர்த்தபதியென்கிற ஒரு செல்வவானுக்கு நாளைக்காலையில் என்னைக் கொடுக்க இருக்கிறார். இதுவரையில் தனமித்திரனையே கணவனாகப்பாவித்துவந்த நான் இச்செய்கையைப் பொறுக்கமாட்டாமல் என் வீட்டிலுள்ளோர் எல்லாரையும் மோசஞ்செய்து இந்தக் காரிருளில் என்கணவன் வீட்டிற்குப்போகப் புறப்பட்டேன். ஆதலால் அடியாளை விட்டுவிடும்படி வேண்டுகிறேன். வேண்டுமானால் இந்தப் பூஷணங்களையெல்லாம் கொடுத்துவிடுகிறேன் எடுத்துக்கொண்டுபோமென்று வாய்தழுதழுக்கச் சொல்லித் தன்கையிலிருந்த நகைமூட்டையை என்கையிற் கொடுத்துவிட்டாள். அதுகேட்டு நான் அவளிடத்தில் மனமிரங்கி, அம்மா நீ பயப்படவேண்டாம். உன்னை நான் உன் நாயகன்வீடு கொண்டு சேர்க்கிறேனென்றுசொல்லி அவளை அழைத்துக்கொண்டு இரண்டுமூன்றடிபோகையில், அப்பட்டணமெங்கும் பகல்போல பிரகாசிக்கும்படி பல பெரும்விளக்குகள் போட்டுக்கொண்டு தடிகளுந்தாம்புகளுமாய் ஒருகூட்டம் பின்தொடர்ந்துவந்தது. அது கண்டு அப்பெண் உடல் நடுங்கிநின்றாள். அதற்கு நான், குழந்தாய் கத்தியும் கையுமாய் உன்பக்கலில் நான் காத்திருக்க உனக்கு அச்சமேன்? ஆயினும் இப்போது இவர்களோடு போராடுவதைவிட எளிதாய் ஒன்று தோன்றுகிறது. விஷப்பூச்சி தீண்டி விஷந்தலைக்கேறி உடல்தெரியாதவன்போல இட்டகால் இட்டகைகளாய்த் தரையிற் படுத்துக்கொள்ளுகிறேன். நீ அவர்களைப்பார்த்து, என் மனத்துயரத்தை நீக்கவந்த மஹான்களே! நாங்களிருவரும் இன்றிராத்திரி இப்பட்டணத்திற்கு வந்தோம். என்நாயகன் பாம்புகடித்து உயிருமிழந்தான். உங்களில் யாராவது விஷவைத்தியருண்டாயின் இவனுக்கு உயிர்ப்புண்டாக்கி என்னைக் காக்கவேண்டும் என்று அவர்களை வேண்டக்கடவை என்றேன். அவள் தன் பிராணன் போய்விட்டதாயே நினைத்திருந்தும் வேறுவழியில்லாமையால் வெகுவருத்தத்துடன் நான்சொன்னபடி நடத்தினாள். அவர்களுள் விஷவைத்தியனென்று அபிமானங்கொண்ட ஒருவன் உயிரிழந்தவன்போல் படுத்திருந்த என்னைப்பார்த்து இனி வைத்தியத்திலுபயோகமில்லை, முகத்தில் களையில்லை, தேஹத்தில் சூடடங்கிற்று, விதியைவெல்லக்கூடுமா, இனி துயரப்படுவதில் பயனென்ன? நாளைக்காலையில் மேற்காரியங்களை நடத்துவோமென்று அப்பெண்ணுக்குத் தேறுதல்சொல்லித் தன்னோடு வந்தவர்களுடன் போய்விட்டான்.

அவர்கள் போனபின்பு நானெழுந்து அவளை உதாரகனண்டை அழைத்துக்கொண்டுபோய் விட்டு, நானொருதிருடன், நள்ளிருளில் நடுத்தெருவில் இவள் உம்மிடத்திற்கு வருவதுகண்டு ஏகாங்கியாய்ப் போகிறாளேயென்று நான் துணையாய்வந்தேன். இதோ இவள் வைத்திருந்த நகைகள் என்று அதை அவன்கையிற் கொடுத்தேன். ஈவிலொப்பற்றவனென்று பேர்படைத்திருந்த அவன் என்செய்கை

யைக்கண்டு சந்தோஷமும் வெட்கமுமடைந்து மஹாப்பிரபுவே! இந்த இராக்காலத்தில் இப்படி நடப்பவரும் உலகினிலுண்டோ? பெண்ணைக்கொடுத்து வாயைக்கவர்ந்துகொண்டீரே, உமது குணம் இப்படிப்பட்டதென்று சொல்ல எனக்கு வாயெழும்பவேயில்லையே! உமக்கு இயற்கையான கள்ளச்செயலெங்கே, இப்போது நீர் செய்த பேருதவியெங்கே! உம்மைப்போல் ஆசையற்றவர்களை நான் எங்குங்கண்டதில்லை. தானமென்பது இப்படிப்பட்டதென்று இப்போதுதான் எனக்குத் தெரியவந்தது. நீர்செய்த உதவிக்குக் கைம்மாறுகாவிடினும், இந்த ஜந்துவைப் பதிலாகக் கைக்கொள்ளவேண்டும். இன்றுமுதல் இவ்வுடல் உமது ஆணைக்கு உட்பட்டது என்றுசொல்லி என் தாள்களில் விழ்ந்தான். நான் அவனையெடுத்து மார்போடணைத்து அப்பா! உனக்கு வேண்டுவதென்ன? என்றுகேட்க; அவன், இவள் தந்தையின் அப்பணையில்லாமல் இவளை மணம்புரிந்து இந்நகரில்வாழ்வது கூடாது. ஆதலால் இப்போதே இவ்விடம் விட்டு வெளியேபோக நினைக்கிறேன். அதற்கும் உமது உத்தரவின்றி நான் அதிகாரியன்று. உமது கட்டளைக்குக் கீழ்ப்படிந்திருக்கிறேனென்றான். அதற்கு நான், வல்லவனுக்குத் தன்னூடென்றும் பிறநாடென்றுமுண்டோ? காடுகளைக் கடந்து தேசாந்தரம்போவதென்ன வாய்க்கெளிதாய்த் தோற்றுகின்றதோ? இவளோ ஒன்றுமறியாத சிறுகுழந்தை; இவளுடம்பு வழிநடந்துபோவதற்கு உரியதா? இதைவிட்டுத் தேசாந்தரம்போவதென்றால், தேகவலியும் புத்திகூர்மையும் குறைந்துபோம். இவ்வளவும் யோசித்தால் இவளுடன் இங்கேயே வசிப்பது சுகமென்று நினைக்கிறேன்; குபேர வல்லவன் தானாய் உன் தாள்களில் வந்துவிழ்ந்து இவளை உனக்குக் கன்னிகாதானம் செய்துகொடுப்பதற்கு வழியொன்று இருக்கின்றது. இவளைப் பிறந்தகங்கொண்டு சேர்ப்போம் வா என்று சொன்னதுகேட்டு, அவன் யாதொன்றும் எதிர்த்து உரையாமல் உடனே புறப்பட்டான். இருவரும் அவளுடன் அவ்வீடுபோய்ச்சேர்ந்து, அவளுடைய ஸகாயத்தாலேயே குடிக்கக் கலசமுமில்லாமல் அவ்வீட்டை கொள்ளையாடிக்கொண்டு அப்பெண்ணை அங்கேயே நிறுத்திக் கொள்ளைப்பொருள்களை ஓரிடத்தில் வைத்துவிட்டு வரும்போது, வழியில் யானையொன்று படுத்திருக்கக்கண்டு இருவரும் அதன்மேலேறி அதைக்கொண்டே அர்த்தபதியின்வீட்டை நிர்த்

ரியாக்கிவிட்டு வீடுபோய்ச் சேர்ந்து ஸ்நாநம்பண்ணி நித்திரை யடைந்தோம்.

மறுநாள் காலையில் எழுந்து நாங்களிருவரும் தினக்கடன்களைக் கழித்து நகரைநோக்கிச்செல்லுகையில், அப்பட்டணமெங்கும் நாங்களிரவிற் செய்த ஸாஹஸச்செயலால் அம்மளிதும்மளியாயிருந்தது. அதுகண்டு குலபாலிகைக்குக் கணவனாயேற்பட்டிருந்த அர்த்தபதியென்பவன் தனக்கு மாமனாராகப்போகிற குபோதத்தன் பொருள்களையெல்லாம் பறிகொடுத்து வறியனானதுகண்டு, அவனுக்குக் கொஞ்சம் தனம்கொடுத்துத் தேறுதல்சொல்லி இன்னும் ஒருமாதங் கழித்துக் கலியாணஞ்செய்துகொள்வதாய்த் தீர்மானித்தான். அப்போதுநான், தனமித்திரனுக்கு ஒரு தோற்பையைக்கொடுத்துச் சொன்னதாவது: நீ இந்தத் தோற்பையை எடுத்துக்கொண்டு அரசனண்டைபோய் இந்தப் பையை மறைவாய் வைத்துக்கொண்டு ஒன்று வேண்டக்கடவை. அநேககோடிதனங்களுக்கு அதிகாரியான வசுமித்திரனென்பவனுக்கு நான் ஒரேமகனென்பது தங்கள் சித்தத்திற்கே தெரியுமே. அப்படிப்பட்ட நான் தானங்கொடுத்து யாசகர்களிடத்தினின்றும் வறுமையை வாங்கிக்கொண்டதனால், என்னை அவமதித்து எனக்காகவே வளர்த்துவந்த குலபாலிகையென்கிறபெண்ணை அவள் தகப்பன் மற்றொருதனிகனுக்குக் கொடுக்க இருப்பது கண்டு நான் வெறுப்படைந்து, உயிரிழக்கத்துணிந்து காட்டிற்குச் சென்று கழுத்திற்கத்திபோடப்போனேன். அப்போது ஒருமுனிவர் ஓடிவந்து கையைப்பிடித்துக்கொண்டு, நீ இப்படிப்பட்ட ஸாஹஸச்செயல் செய்வதற்கு ஏது யாதென்றார்? அதுகேட்டு நான் இதற்குமூலம் தாரித்திரியமே என்றுசொல்ல; அவர் கருணைகொண்டு, அப்பா! உனக்கேன் இந்தத் துர்ப்புத்தி; தன்னுயிரைத்தானே போக்கிக்கொள்ளாமலே அநேகர் மேன்மைபெற்று வாழ்ந்திருக்கிறார்கள்; பொருள்தேடுவதற்குப் பல வழிகளுண்டு; உயிரை இழந்துபோனால் மறுபடி அதைத்தேடுவதற்குமாத்திரம் வழி எங்குமில்லை. இப்போது அவைகளைச் சொல்லியென்ன; இதோ இந்தப் பை வேண்டியபொருளைக் கொடுக்கும்; யான் வெகுவாய்த்தவமியற்றி இதைப் பெற்றேன்; இதை நீ எடுத்துக்கொண்டுபோ; வர்த்தகர்களுக்காகவும் வேசிகளுக்காகவும் இது பொருள் கறக்கமாட்டாது. அநியாயமாய் ஒருவன் அபஹரித்துக்கொண்டுபோனால் அவனுக்

குப் பயன்படாது. நியாயமாய்ப் பெற்றுக்கொண்டாலும், அப்பொ ருள்களை நல்லவிஷயத்திலேயே செலவுசெய்யவேண்டியது. அசை யும் நல்ல பரிசுத்தமான இடத்தில்வைத்து ஒரு தேவதையாய் ஆரா தித்துவரவேண்டும். அப்படியானால் நாள்தோறும் காலையில் இது நிரம்பச் சுவர்ணம் சுரந்திருக்கும்; இதுதான் இப்பையின் மஹிமையென்றார். அதையெல்லாம் நான் கைகட்டிக் கேட்டுக் கொண்டிருந்தேன்; அவர் அந்தப் பையை என்கையிற்கொடுத்து விட்டு உடனே மறைந்துபோனார். இதோ அவர் அளித்த பை; தங்களுக்குத் தெரியாமல் இதை வைத்திருக்கக்கூடாதென்று கொண்டுவந்தேன்; தங்கள் சித்தமெப்படியோ அப்படியே நடக்கச் சித்தமாயிருக்கிறேனென்று சொல். இதை வைத்துக்கொண்டு உன் இஷ்டப்படி வாழ்ந்திருவென்று அவன் உரைப்பானென்பதற்குச் சமிசயமில்லை. இதை ஒருவரும் திருடிக்கொண்டுபோகாமலிருக் கும்படி அன்புசெய்யவேண்டுமென்று மறுபடி கேட்கக்கடவை; அதற்கும் அவன் சம்மதிப்பான். அப்புறம் வீடுவந்துசேர்ந்து உன் இஷ்டப்படி நாள்தோறும் தானஞ்செய்துவரலாம். ஒவ்வொரு நாளும் இரவில் ஊரடித்துக்கொணர்ந்த பொருள்களைப் போட்டுப் பையை நிரப்பலாம். இச்செய்திகேட்டவுடனே குபோதத்தனும் அர்த்தபதியை அற்பமாநினைத்துத் தன்பெண்ணை உன்னிடத்திற் கே கொண்டோடிவருவான். அதன்மேல் அர்த்தபதி செல்வச்செரு க்கினால் எதிர்த்துவந்தால் அவனைப் பராரியாக்கப் பல வழிகளிரு க்கின்றன. நமது திருட்டுத்தனம் மறைந்துபோவதற்கும் இது தான் வழியென்றேன். தனமித்திரனும் அதிக சந்தோஷமடைந்து அப்படியே நடத்தினான். அன்றையதினமே நான் அர்த்தபதிக் காட்பட்டிருந்த விமர்த்தகனென்பவனைக்கொண்டு அர்த்தபதிக்கும் உதாரகனுக்கும் விரோதமுண்டாக்கினேன். பொருளையே பெரி தாகக்கொண்ட குபோதத்தனும், அர்த்தபதியினிடத்திலிருந்த ஆசையையொழித்துத் தன் கன்னிகையைத் தனமித்திரனண்டை கொண்டுவிட்டு மிக்க நல்லவார்த்தைசொல்லி அவனுக்கே கலியா ணம் பண்ணிக்கொடுத்தான். தனமித்திரனும் தன் இஷ்டப்படி மனையாளுடன் சுகமே வாழ்ந்திருந்தான்.

(இன்னும் வரும்.)

# சென்னைநகரில் மஹாராணியார் குமாரரவர்கள் விஜயம்செய்த மஹோத்சவம்.

நாளதுமாசத்தில் முக்கியமான விருத்தாந்தம், இச்சென்னைக்கு மாட்சிமைதங்கிய பிரன்ஸவ் வேல்ஸ் என்னும் நமதிளவரசரவர்கள் விஜயம்செய்த, பிரஜைகள் பெறுதற்கரிதான, ராஜகோலக் கண்காட்சிதான் என்று சொல்ல வேண்டுமோ? அக்கண்காட்சியின் விவரத்தை அடியில்வருமாறு சுருக்கிச்சொல்லுவோம்.

முதல் நாள்.

இளவரசரவர்கள் டிசம்பர்மீ 13வ காலையில் இருப்புப்பாதைவழியாய் வந்து ராயபுரம் ஸ்டேஷனில் இறங்கி அங்கிருந்து தம்புசெட்டிவீதி வழியாய்த் துரைத்தன மண்டபத்தில் சேர்வாரென்கிற சங்கதி முன்னமே தெரிந்திருந்தபடியால், அவர்களைத்தரிசிக்கும்படியாகப் பட்டணத்தில்வந்து சேர்ந்திருந்த ராஜாக்களும், பாளையக்காரர்களும், நகரவாசிகளாகிய பிரபுக்களும், கவர்னர்முதலிய துரைத்தன அதிகாரிகளும் அன்று சூரிய உதயத்துக்குமுன்னே மேற்படி ஸ்டேஷன் சேர்ந்து அதிக சந்தோஷத்துடன் எதிர்கொள்ளக் காத்திருந்தார்கள். இப்படியிருக்கையில் காலை எழுமணிக்கு இளவரசர் தம்முடைய பரிவாரத்துடனே விசேஷ வண்டிவரிசையில்வந்து ஸ்டேஷனில் விஜயஞ்செய்தார்கள். அப்போது அவர்களுடைய கௌரவத்திற்குத்தக்கபடி பீரங்கிவெடிதீர்தல் முதலிய மரியாதைகள் நடத்தப்பட்டன. வண்டியிலிருந்து இறங்கித் தம்முடைய நல்வரவை எதிர்பார்த்திருந்த மஹாராஜாக்கள் முதலானவர்களைத் தனித்தனியாய் அவரவர்கள் மனதுவக்கும்படி கைகொடுத்து அவர்களோடு ஆதரவாய்ச் சம்பாஷித்து, ஒவ்வொருவரோடும் இந்துதேசத்திற்கு உங்களைப்பார்க்கவே வந்தேனென்று சொல்லியதாகத் தோற்றும்படியாக பிரதி மரியாதை நடத்தினர். இப்படியாக அவரவர்களுக்கு உசிதப்பிரகாரம் மரியாதைநடத்தித் தம்முடைய பரிவாரங்களில் முக்கியமானவர்கள் முன் வண்டிகளில் ஏறிச்செல்ல, தாம் நடுவில் தமக்கென்று நாலுகுதிரைபூட்டிச் சித்தஞ்செய்திருந்த இரதமேறி தம்முடைய பக்கத்தில் இந்தச் சென்னை ராஜதானி கவர்னரவர்களாகிய பக்கிங்ஹாம் ட்யூக் பிரபு வீற்றிருக்க, ராஜசின்னமாய் அலங்காரமான பொற்குடையின் நிழலில் பவனிகோலமாய்ப் புறப்பட்டார். அந்த ரதத்தின்பின் இந்த ராஜதானியிலுள்ள மஹாராஜாக்கள் முதலானவர்களின் ரதங்கள் மரியாதைக்கிரமப்படி நடந்தன.

இவ்விதமாய் அவர்களெல்லோரும் சிறப்பாகச் செல்லுகையில் சென்னை பட்டணத்துள்ள அபார ஜனங்களும் வெளியிலிருந்துவந்த ஜனங்களில் அநேகரும் தம்புசெட்டிவீதியில் இருபுறத்திலும் மெத்தைகளின்மீதும் கீழும் தலைநிமிர்ந்து வெகுநேரம் ஆசைதீரக் கண்சிமிட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார்கள். இப்படி ஜனங்கள் நேத்திரோற்சவமாய்ப் பார்த்துக்கொண்டிருக்க இளவரசருடைய ரதம் பெருநடையாய்ச் சென்று மாளிகைகளின் வரிசைகடந்து, கோட்டைவெளியில் இருபுறத்திலும் நின்றுகொண்டிருந்த எண்ணிறந்த பிரஜைகள் மனங்களிக்கும்படி செய்து, அதன்பிறகு, கோட்டையின் முகப்பில் ஏற்படுத்தப்பட்டிருந்த பீடங்களின்மீது உட்கார்ந்திருந்த நகரவிசாரணைச் சபைத்தலைவர்களுக்குக் காட்சியளித்து வாலா

ஜாதுவாரபாலத்தைக் கடந்துசென்றார். அந்தப் பாலத்தின் தென்முனை முதல் மன்றோ பிரதிமைவரையில் சாலையினிருபுறத்திலும் சித்தஞ்செய்திருந்த மேடைவரிசை ஸ்தானங்களில், இப்பட்டணத்திலுள்ள கிரமசிக்ஷா பாடசாலைகளின் சிறுவர்களும் சிறுமிகளும் உபாத்தியாயர்களும் நிறைந்திருந்தார்கள். அவர்கள் இளவரசர் ரதம் தங்களுக்குச் சமீபத்தில் வருகையில் முகமலர்ச்சியோடு எழுந்துநின்று கைகொட்டிப் புகழ்ந்துபாடித் தங்களுடைய ஆனந்தத்தையும் ராஜபக்தியையும் வெளியிட்டார்கள். படிக்கட்டு மேடை வரிசைகளில் தென்புறத்துமுதலில், தங்கள் கல்வித்திரட்டு அடையாளமாயிருக்கிற விருது உடைகளோடு வந்திருந்த எங்கிலீஷ்பாஷை வித்வான்களை இளவரசர் கண்ணோக்கிப்பார்த்தபொழுது, அவரவர்களுடைய வித்தியாசின்னங்கள் இவைகளென்று, இளவரசர் திவ்விய சித்தத்திற்கு விசதமாய்த் தெரிந்திருந்திருக்கலாமென்று, அவருடைய முக உல்லாசத்தால் புலப்பட்டன. அப்புறம் ரதம்சென்றபோது பற்பலவிதப் படைவீரர்கள் அணிதிரிந்து வெள்ளிக்கொடிபிடித்து இருபுறத்திலும் நின்று கீதவாத்தியத்தோடு உபசரித்தனர். இவ்வாறாகப் பரிஜனங்களும் சிற்றரசர்களும் சூழ்ந்துவரச்சென்று துரைத்தனமாளிகைசேர்ந்து அங்கு சகல உபசாரங்களையும் அங்கீகரித்து, பகல்மேல் கனவான்களுக்கும் ராஜாக்களுக்கும் தர்சனம்கொடுத்தனர்.

மறுநாள் தம்முடைய பிறந்தினமானதால் விநோதவியாபாரங்களில்லாமல் அந்தத்தினத்தை ஏகாந்தமாயிருந்து கொண்டாடினார்.

மூன்றுநாள்,

இந்தச் சென்னைபுரியின் ஸமுத்திரதீரத்தில் ஏற்படுத்த உத்தேசித்திருக்கிற கப்பல் ரக்ஷணஸ்தானம் கட்ட ஆரம்பிக்க, இளவரசரும் சாயங்காலத்தில் புறப்பட்டுக் கடற்கரைக்கு வந்தார்கள். அந்தச் சமயத்தில் இத்தேசத்து மஹாராஜாக்கள்முதலானவர்களும் அவ்விடம் வந்திருந்தார்கள். இவ்விடத்து விசாரத்தலைமைத் துரைகளும் துரைசானிகளும் இந்து உத்தி[illegible]களும் நெருங்கி அங்கு ஏற்படுத்தப்பட்டிருந்த மேடைவரிசைகளிலிருந்து இ[illegible]ரைத் தரிசிக்க அனுகூலம்பெற்றிருந்தார்கள். பட்[illegible]ஜகளும் எல்லாரும் சேர்ந்து ஆனந்தத்தோடு நமது [illegible] இங்கிலீஷ் ராஜவம்சத்தில் ஜநித்த இளவரசு இவர்தானென்று அவர் [illegible]த்தையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். உத்தேசித்த சுபமுகூர்த்தத்தில் வேல்ஸ் பிரபு கப்பல்ஸம்ரக்ஷணை ஸ்தானத்துக்கு அஸ்திவாரமாக ஒரு கல்லைத் தமது கரத்தால் கடலில் படியவைத்தார். அதைப்பார்த்து அங்கிருந்தவர்கள் யாவரும் களித்து முகமலர்ச்சியோடு இளவரசனை வாழ்த்தினார்கள். இன்னும் அங்கு அநேகம் உசிதமான வேடிக்கைகள் நடந்தேறின. பின்னும் அன்றிரவில் 10 மணிக்கு ராஜகுமாரரைச் சந்தோஷிப்பிக்கும்படியாக உப்புக்கழிகளின் மத்தியில் விதம் விதமான பாணவேடிக்கைகள் நடத்தின தருணத்தில் வந்துகூடின ஜனங்களை அளவிட்டுச்சொல்ல யாராலாகும். அங்கே பிரவேசிக்க அனுமதி பெற்றுவந்த ஜனங்களில் புருஷர்களுக்கு ஓரிடமும் ஸ்திரீகளுக்கு மற்றோரிடமும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. அவ்வனுமதி பெறாதவர்கள் கோட்டை வெளியில் அவரவர்களுக்கு அனுகூலமானபடி நின்றுகொண்டு பார்த்தார்கள். 11 மணி வேளையில் அங்கு வந்திருந்த ஜனங்களெல்லாரும் எத்தன்மையான பாணவேடிக்கைகள் நடக்கப்போகிறதோ

வென்று பிரமித்து ஆகாசத்தை நோக்கிப்பார்க்கையில் வெண்ணெய் முத்தையைப்போன்ற சில பாணங்கள் எழும்ப ஆரம்பித்தன. மற்றும் சிலநேரத்தில் சிலது ஆகாசபாணங்களாகக் கிளம்பி வெண்ணெய்முத்தைகளாகவும் பக்ஷி உருவமாயும் சிதறின. சில பாணங்கள் வெண்ணெய்முத்தைகளாய் எழும்பி ஆகாசத்தில் படீலென்று வெடித்துச் சில நீலமாகவும், சில பச்சையாகவும், சில செகப்பாகவும், சில வெண்மையாகவும் புஷ்பம்போல் விழ ஆரம்பித்தன. அவற்றுள் சில பாணங்கள், அங்கென்னபார்க்கிறீர்கள்? அதிலும் விசித்திரமாயிருக்கின்றன, இவைகளைப் பாருங்களென்று சொல்லும்படியாகச் சுழன்றெழும்பிக் கொஞ்சதூரம் மேலேபோய்த் தலைகீழாய்த் திரும்பி ஒருமுனை தவளைத்தலைபோலப்பெருத்து மற்றொருமுனை வால் போலநீண்டு கொஞ்சதூரம் கிழிறங்கி படபடவென்று சப்தித்துக்கொண்டு ஒன்றையொன்று தாக்கின. நடப்பட்ட சில கம்பிகளின் உச்சியில் பாணங்கள் சக்கிராகாரமாய்ச் சுழன்றுகொண்டு புஷ்பங்களைச் சொரிந்தன. சிலது வெண்ணெய்முத்தைபோல் ஆகாசத்தில் கிளம்பி அவ்விடத்தில் படீலென்று வெடித்து ஒரு வித்தினின்றும் உற்பத்தியாகிய மரத்தில் அநேக வித்துகள் உதிர்வதுபோலும் அநேக ஆயிரம் நக்ஷத்திரங்கள்போலும் உதிர்ந்தன. இவ்வித பாணங்கள் நம்முடைய தேசத்துச் சிற்பிகள் செய்யமாட்டுவார்களாவென்று ஒருவரையொருவர் வினவினார்கள். அவர்களில் வேறு சிலர் இத்தேசத்துச் சிற்பிகள் ஆகாசபாணங்களையும் வெண்ணெய்முத்தைபோல எழும்பும் பாணத்தையும் ஆகாசபாணமாய்ச் சென்று அவ்விடத்தில் வெண்ணெய்முத்தைகளாக மாறுகிற பாணங்களையும் செய்கிற வழக்கம் உண்டேயொழிய இவ்விதமான விசித்திரப்பாணங்கள் செய்கிற வாடிக்கை இல்லையென்று சொன்னார்கள். மற்றும் சிலர் இதின் வகை நம்முடையவர்களுக்குத் தெரியுமானால் இன்னும் அதிக விசித்திரமான வேடிக்கைகளை விர்த்திசெய்வார்களென்று சொன்னார்கள். இவ்விதமாய்ப் பாணங்களைப் புகழ்ந்து முழுமையும் பார்த்து 12 மணிக்கு அவ்விடம்விட்டுத் தங்கள் வாஸஸ்தானம் சேர்ந்தார்கள். இளவரசர்முதலானவர்கள் கவர்னர் மாளிகையில் விருந்துண்டு அங்கிருந்தே பாணவேடிக்கை பார்த்தனர்.

### நான்காநாள்,

இளவரசர் சென்னைச் சுற்றுப்பக்கங்களில் காலையில் சவாரிசெய்து பகல்மேல் யூனிவர்ஸிடி சபையாரி இன்னும் இரண்டொருசங்கத்தார் எழுதிக்கொண்டுவந்த அபிநந்தனபத்திரிகைகளைப் படிக்கக்கேட்டுச் சந்தோஷித்து அவரவர்களுக்கு உசிதமான அங்கீகார வாக்கியங்களை வாய் மலர்ந்து வந்தவர்களைக் கௌரவப்படுத்தியனுப்பினார். யூனிவர்ஸிடியாருடைய பத்திரிகையில் வெகு சிறப்பான கருத்துகளடங்கியிருந்தன. அவைகளை இங்கு எழுத இடமில்லை. அன்றிரவில் க்ளப்புஹௌஸ் என்னும் ஐரோப்பிய துரைமார்கூடும் விலாசமண்டபத்தில் விருந்தும் ஆட்டம்பாட்டமும் இளவரசருக்காக மிகச் சிறப்பாய் நடந்தன.

### ஐந்தாநாள்,

வித்தியார்த்திகளின் விருந்திற்காக யுவராஜா ஜனவிநோத உத்தியானவனத்திற்கு விஜயஞ்செய்தது.

ஐந்தாம்நாள் மாலை இரண்டுமணிக்குமேல் இச்சென்னைநகரைச் சுற்றிலுமுள்ள கிரமசிக்ஷாபாடசாலைகளின் வித்தியார்த்திகளான பெண்

பிள்ளைகளும் ஆண்பிள்ளைகளும் மேற்படி உத்தியானவனத்திற்குவந்து, இளவரசரும் மற்ற நாட்டிலுள்ளோரும் கூடி வேடிக்கைபார்க்கும்படி விருந்துண்டுகளிக்கப் பாடசாலைத்தலைவர்முதலிய சில பிரபுக்கள் ஏற்பாடுசெய்திருந்தனர். அதன்படியே திருவல்லிக்கேணி மைலாப்பூர்முதலிய விடங்களிலிருந்துவந்த அநேகம் சிறு வித்தியார்த்திப்பெண்கள், கொடிகள்கட்டி அலங்கரித்த ட்ராம்வே என்னும் வீதி இருப்புப்பாதை வண்டிகளிலேறித் தென்னண்டைப் பாரிசத்திலுள்ள இரண்டு துவாரங்களாலும் அணியணியாய் மேற்படி தோட்டம்வந்து சேர்ந்தனர். வடவண்டைப்பக்கத்தில் ட்ராம்வே வண்டி இராவிடினும், இதென்ன பலவருணப் பதுமைகள்தானோவென்று பலரும் பார்த்து வியக்கும்படி, அநேகம்பெண்கள் நாநாவருணப் பாவாடையுடுத்துப் பூஷணங்களணிந்து பூமுடித்துச் சிங்காரித்துக்கொண்டு மேலே பாய்வளைத்துக்கட்டிய பரந்த நான்குசக்கரச் சாமான்வண்டிகளில் வண்டிக்கு 30, 40 கணக்காய் வரிசைதிர்ந்து உட்கார்ந்து வந்து வடக்குவாயில் வழியாய்ச் சிங்காரத்தோட்டஞ்சேர்ந்தனர். சமீபத்திலிருக்கிறஅநேகம்பிள்ளைகள் அத்தோட்டத்துப் பலவழிகளாலும் வந்து நெருங்கினார்கள். இப்படி இச்சென்னை மாணாக்கர் அனைவரும் சிங்காரத்தோட்டத்திற்கு வந்து கோலாஹலத்துடன் அந்தந்தப் பாடசாலைகளுக்குஉரிய கொடிகளுடன் வெவ்வேறு இடங்களில் வரிசைவரிசையாய் வந்து கூடினார்கள்.

அங்கே பச்சையப்பமுதலியாருடைய உருவமெழுதிய, மேற்படியார் பாடசாலைக்கொடிச்சீலையைச் சிறப்பித்துப்பார்த்து வியந்துபேசாதவர்களில்லை. கோவிந்தநாயகர் பாடசாலைக் கொடியில் வித்தியாமூர்த்தியாகிய சரஸ்வதிதேவியின் வடிவம் எழுதியிருந்தது. கோமளேசுவரபுரம் ஸ்ரீநிவாஸப்பிள்ளை பெண் பாடசாலைக்கொடியில் மேற்படியார் உருவம் சித்திரித்து அதன்கீழ் 'வித்தியாசக்தி' என்னும் உறுதிமொழி எழுதியிருந்தது. இப்படியே இதரபாடசாலைக் கொடிச்சீலைகளும் விதம்விதமாய் அலங்கரித்திருந்தன. வாத்தியமேடையில் இங்கிலீஷ்வாத்தியங்கள் முழங்கிக்கொண்டிருந்தன. [illegible]ச்சுற்றிலும் கழைக்கூத்து, பயல்மாளுட்டம், மல்யுத்தம், சிலம்பவித்தை முதலிய சுதேசத்து வேடிக்கைகள் நடத்தப்பட்டன. ஒருபக்கத்தில், மரயானை மரக்குதிரைமுதலியவைகள் கட்டி அவைகளின்மீது ஆசனங்கள் ஏற்படுத்திய [illegible]ராட்டினம் ஓர்வகைவாத்தியத்துடன் கரகரவென்று சுழன்றுகொண்டேயிருந்தது. சுதேசவித்தியார்த்திகள் பலர் மற்றவைகளைவிட அதையே மேலா மெச்சி விளையாடிக்கொண்டிருந்தார்கள். ஈஸ்டிண்டிய வித்தியார்த்திகள், பந்தடித்தல், கோணிப்பையிலிடுப்புவரையில் காலிட்டுக்கொண்டு ஓடுதல், தண்ணீர்ப்பை தூக்கிக்கொண்டு ஓடுதல், பொய்வேலி தாண்டுதல் நீரில் நீந்திவிளையாடுதல்முதலான பல பந்தயவிந்தைகள் நடத்தினார்கள். அத்தோட்டத்தில் பற்பலவிடங்களில் பிராமணஜாதிக்கு வெள்ளைக்கொடியும், வைசியஜாதிக்கு நீலக்கொடியும், சூத்திரர்களுக்கு சிவப்புக்கொடியும், மஹம்மதியர்க்கு பச்சைக்கொடியும், கிறிஸ்துவர்களுக்கு மஞ்சள் கொடியும் கட்டி விருந்தளிக்கப் பந்தல்கள்போட்டிருந்தன. மற்றவர்களுக்குக் கூடாரங்கள் அடித்திருந்தன. அவரவர்கள் ஜாதியாசாரங்களுக்கு லோபமில்லாமல் அவரவர்களிடத்தில் கிரமமாய்ப்போய் சிறு திண்டி உண்டார்கள். சுதேசவித்தியார்த்திகளுக்கு வாழை, கமலா, மணிலா முதலிய பழவகைகளும், மிட்டாய் கற்கண்டு சர்க்கரை வாதுமைப்பருப்பு முந்திரிகைப்பருப்பு முதலிய சிற்றுண்டிகளும், ஈஸ்டிண்டியருக்கு ரொட்டி

வெண்ணெய் தேத்தண்ணீர் முதலியவைகளும் கொடுக்க யாவரும் திருப்தியாய் உண்டு களித்திருந்தார்கள்.

இப்படியிருக்கையில் இளவரசர் கவர்னர் அவர்களோடு ரதமேறி, பரிவாரங்கள் சூழ்ந்துவர, உத்தியானவனம் புகுந்து மேற்படி பாடசாலைகளிருந்தவிடங்களையும் அங்கங்கு நடந்த விநோதங்களையும் சுற்றிப்போய்ப் பார்த்து, ஆண்பிள்ளைகள் ஆரவாரத்தோடு நமது இளவரசர் வாழிவாழி! பல்லூழிகாலம் வாழிவாழி!! என்றும், பெண்பிள்ளைகள் மங்களகீதம்பாடியும் வாழ்த்திச் செய்த வந்தனத்தையும் முகோல்லாசத்துடன் அங்கீகரித்து தோட்டத்தைவிட்டுச் செல்லுகையில், வழியில் மன்றோ பிரதிமைக்கு எதிர்வெளியில் ராணுவப்படைவீரர்கள் அணிவகுத்து நின்றதைக்கண்டு அவர்கள் நடையுடைபாவனைகளைச் சோதித்து மகிழ்ந்து அப்புறம் துரைத்தனமாளிகைபோய்ச் சேர்ந்தனர்.

அன்றைய தினம் ராத்திரி இளவரசர் ராயபுரத்தில் கட்டியிருந்த சதிர்ப்பந்தலுக்குச் செல்லும் போக வழியில் இருபுறத்திலும் விதம்விதமான தீபாலங்காரங்கள் செய்யப்பட்டன. அவைகளுள் பச்சையப்பமுதலியார் பாடசாலையில் செய்திருந்த விநோதத்தைக் கண்டு மகிழாதவர்களில்லை. இருப்புப்பாதைஸ்தானம் வெகு விசித்திரமாய் அலங்கரித்திருந்தது. கடற்கரையோரத்திலுள்ள சாலைகளிற் செய்திருந்த தீபாலங்காரம் மிகச் சிறந்தது. கடலில் கட்டுமரங்களில் தீபங்கள் ஏற்றியிருந்தது. கடலின்மேலும் பற்பல வருணமான விளக்குகள் ஏற்றியிருந்தனபோல் பிரகாசித்தது. கப்பல்களிலும் கடற்கரைப்பாலத்திலும் பல விநோதக்காட்சியுள்ள பாணவேடிக்கைகள் செய்யப்பட்டன. பிரின்சு அவர்கள் இக்காட்சியைக் குளிர்ந்தகாற்றில் நின்று கண்ணுறைப் பார்த்துப் பிறகு சதிர்ப்பந்தலுக்குள் விஜயஞ்செய்து அங்கு நகரவாசிகள்செய்த உபசாரங்களைப் பெற்றுக்கொண்டு சுதேச நர்த்தன கீதவாத்தியம்முதலான விநோதங்களைப்பார்த்து மிகக் களித்தனர்.

## ஆறுநாள்,

மறுநாள் காலையில் சில துரைமாருடன் வேட்டையாடி பகலில் சில ராஜாக்களுக்குத் தாம் முன் பெற்றுக்கொண்ட காணிக்கைகளுக்குத்தக்கதாய் வெகுமதிகள் கொடுத்தார். மாலை மூன்றேமுக்கால்மணிக்கு கடற்கரை வாராவதியடியில் வந்திருந்த கனவான்களுக்கு அவரவர்களுக்குத் தக்கபடி மரியாதைசெய்து, ராஜபக்தியோடு திரளாய்க் கூடியிருந்த ஜனங்கள் ஆகாயமளவில் கேழ்க்கும்படி குரலெடுத்து வாழ்த்தின வாழ்த்துகளைக் கேட்டுக் களித்து வந்தனம் செய்துகொண்டே கவர்னருடன் படகேறி 'சிரபிஸ்' என்னும் நீராவிக்கப்பல்போய்ச் சேர்ந்து கல்கத்தாவுக்குப் பிரயாணப்பட்டார்.

வெளிநாட்டிலிருந்து வந்திருந்த யாவரும் பாடசாலைப் பிள்ளைகளுக்குச் செய்த வேடிக்கையையே சிறப்பித்துச் சொன்னமையால் யாமும் அதையே சற்று விவரமாய்க் கூறினோம்.

ஷ்

ஜனவிநோதினி பத்திரிகைக்கு

மகாகனம்பொருந்திய இளவரசருடைய

நல்வரவைப்பற்றி

நமது இஷ்டர் ஒருவர் எழுதியனுப்பிய

## கீர்த்தனை.

இராகம்-தோடி. தாளம்-சாபு.

### பல்லவி.

இன்றே சுதினம் அம்மா!-[illegible]
இன்றே சுதினம் அ[illegible]

### அநுபல்லவி.

[illegible]பெருகும் [illegible] விக்டோரியாள் பெற்ற
[illegible]குணபிரின்ஸ் வேல்லை நாமெல்லாம் காணலுற்ற— இன்றே.

### சரணங்கள்.

1 இந்துதேச ராஜரெலாம்—வந்துகூடி
இனிதாத் தந்தனரே சலாம்;
இந்த அரசைக் காண்ப தெந்தநாளென்று நொந்த
சிந்தாகுலம் தீரத் தரிசனம் இவர்தந்த— இன்றே.

2 நித்தியதரித்திரத்தாலே—வருந்துவோர்க்கு
நிதிகிடைத்தாப் போலே,
உத்தம ராணியவர் உகந்தருள் புத்திரதீபம்
உயர்சேவைதந்ததாலே ஒழிந்தோமே மனஸ்தாபம்— இன்றே.

3 மங்கையரே வாரீர்-ராஜவிநோத
மகத்துவத்தைப் பாரீர்;
பங்கய மலர்தூவிப் பல்லாண்டு மிகப்பாடும்
பாக்கிய மிவரென்று பரிந்துநீர் கொண்டாடும்— இன்றே.

Printed at the C. K. S. Press.